வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 29.12.2025 திங்கட்கிழமை இதழ் : 363 பக்கங்கள் : 08

# கணக்கில் வராத 19 துப்பாக்கிகள்; டக்ளஸிடம் விசாரணைகள் ஆரம்பம்

## ஜனவரி 9 வரை விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, டிசெம்பர் 29

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் 19 குறித்து இதுவரை கணக்கில் வரவில்லை. இது தொடர்பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கணக்கில் வராத ஆயுதங்களில் 15 ரி - 56 ரக துப்பாக்கிகளும் 5 9 மில்லிமீற்றர் பிஸ்டல் துப்பாக்கிகளும் அடங்கும். அத்துடன், ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட ரி - 56 துப்பாக்கி தோட்டாக்கள், 100இற்கும் அதிகமான 9 மில்லிமீற்றர் பிஸ்டல் துப்பாக்கி தோட்டாக்களும் உள்ளடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆயுதங்கள் 2001ஆம் ஆண்டு டக்ளஸ் தேவானந்தாவுக்கு இராணுவத்தால் வழங்கப்பட்டவை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, தடுத்து வைக்கப்பட்டுள்ள டக்ளஸ் தேவானந்தா கம்பஹா நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். 07

# சமஷ்டி கட்சியினரான நாங்கள் அது குறித்து பேசாமல் விடுவோமா?

## தமிழ் அரசின் சிவஞானம் கேள்வி

த. பிரதீபன்
யாழ்ப்பாணம், டிசெ. 29

இலங்கை தமிழ் அரசு கட்சியே சமஷ்டி கட்சிதான். ஆகவே, நாங்கள் சமஷ்டியை பற்றி பேசாமல் விடுவோமா - இப்படி கேள்வி எழுப்பியிருக்கிறார் இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம்.

நேற்றைய தினம் நல்லூரில் அமைந்துள்ள அவரின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்திய வெளிவிவகார அமைச்சரை 07

# 6 அமைச்சர்களின் சொத்துகள் தொடர்பில் விசாரிக்க முடிவு?

கொழும்பு, டிசெ. 29

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் ஆறு பேருக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இதன்படி, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, வசந்த சமரசிங்க, 07

# ஊடக சுதந்திரத்தை முடக்கினால் மக்களை வீதிக்கு இறக்குவோம்!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் செயல்பட்டால் அரசாங்கத்துக்கு எதிராக மக்களை வீதிக்கு இறக்குவோம். பொலிஸார் ஒருதலைப்பட்சமாகவே செயல்படுகின்றனர் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை பணிமனையில் நடத்திய செய்தியாளர் 07

## புதிய காற்று சுழற்சி உருவானது:

# வடக்கு, கிழக்கில் கனமழைக்கு வாய்ப்பு; மலையகத்தில் நிலச்சரிவுகள் ஏற்படும்!

யாழ்ப்பாணம், டிசெ. 29

இலங்கைக்கு கனமழை கிடைக்க வாய்ப்புள்ள புதிய தாழமுக்கம் எதிர்வரும் 2ஆம் திகதி தோற்றம் பெறவுள்ளது. இதனால், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 6 மாகாணங்களுக்கு கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது. கனமழையால் மலையகத்தில் நிலச்சரிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவரும் காலநிலை அவதானிப்பாளருமான நா. பிரதீபராஜா எதிர்வுகூறியுள்ளார்.

இது தொடர்பில் நேற்றிரவு அவர் வெளியிட்ட கால நிலை அவதானிப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை 07

# "மாகாண சபை தேர்தலை அரசு நடத்தாது"

கொழும்பு, டிசெ. 29

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பித்து விட்டது. எனவே, மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்று முன்னாள் அமைச்சர் 07

# இந்தியாவின் உதவி நிதியை கையாள்வதற்கு கூட்டு குழு!

கொழும்பு, டிசெ. 29

பேரிடருக்கு பிந்தைய மீள்கட்டுமான பணிகளுக்கான இந்தியாவின் 45 கோடி அமெரிக்க டொலர் உதவி நிதியை கையாள்வதற்காக இலங்கை, இந்திய அதிகாரிகளைக் கொண்ட கூட்டுக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த நிதியைக் கையாளும் பொறுப்பு இந்தக் குழுவிடமே ஒப்படைக்கப்படும் என்று நாட்டின் மூத்த அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடன் திட்டத்தின்கீழ் 07

# அவசரகால சட்டம் மீளவும் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருந்த பொது அவசரகால நிலைமையை மேலும் நீடித்து ஜனாதிபதியின் செயலாளரால் நேற்றைய தினம் அதிவிசேட 07

# அத்தியாவசிய சேவை பிரகடனம்!

கொழும்பு, டிசெ. 29

மின்சாரம், எரிபொருள் - எரிவாயு விநியோகம் உள்ளிட்டவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொது சேவைகள் சட்ட விதிகளின்படி ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இந்த அறிவிப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை 2468/46 ஆம் இலக்க சிறப்பு வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டது.

வர்த்தமானி அறிவிப்பின்படி, 07

# தாளையடி கடலில் நீராடிய இளைஞரை காணவில்லை

த. காண்டீபன், சி. தில்லைநாதன்
வடமராட்சி, டிசெ. 29

வடமராட்சி கிழக்கு - தாளையடி கடலில் நீராடிய இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

உடுத்துறையை சேர்ந்த ஜெசிந்தன் என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல்போன இளைஞர் தனது நண்பருடன் இணைந்து நேற்று பிற்பகல் கடலில் நீராட சென்றுள்ளார். அவர்கள் நீராடிக் கொண்டிருந்தபோது கடல் அலையில் சிக்கி அவர் காணாமல் 07

# மருந்து மாபியாவை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, டிசெ. 29

மருந்து பொருட்கள் மாபியாவைத் தொடர்வதற்கு மக்கள் அரசாங்கத்துக்கு ஆணை வழங்கவில்லை. தரமற்ற மருந்துப் பொருட்கள் மோசடியை ஒழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும். அடிப்படையானதும் மனித உரிமையாகவும் காணப்படும் சுகாதார நலன் கருதி, சேனக பிபில மருந்து கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் 07

# புகழ்பூத்த கல்வியியலாளர் பஞ்சலிங்கம் காலமானார்!



யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான அ. பஞ்சலிங்கம் (வயது 89) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரிகளின் முன்னாள் அதிபராவார். அத்துடன், சிறந்த கல்வியியலாளருமாவார்.

கொக்குவிலை சேர்ந்த இவர் பணி ஓய்வின் பின்னர் பல்வேறு சமூக கட்டமைப்புகளில் 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான ஆங்கில ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், டிசெ. 29

தென்மராட்சி வலயக் கல்வி பணிமனை ஆங்கிலம், வெளிநாட்டு மொழிகள் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் மாநாடு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.00 மணி முதல் தென்மராட்சி வலயக் கல்வி பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி. கமலராஜன், ஆங்கிலம் - வெளிநாட்டு மொழிகள் பிரிவின் இயக்குநரும் பிரதிக்கல்விப் பணிப்பாளருமான பி. என். சுதர்சன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் முதன்மை உரையாளராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில், ஆங்கில மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு, மொழி கற்பித்தலில் டிஜிற்றல் கருவிகள், கலப்பு கற்றல் முறை, தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு பயன்பாடு, மாணவர் ஈடுபாடு மற்றும் ஊக்குவிப்பு போன்ற சமகால விடயங்களில் சிறப்பு ரைகள் இடம்பெறவுள்ளன. (ஐ)

# காங்கேசன்துறையில் உணவு திருவிழா!



யாழ்ப்பாணம், டிசெ. 29

வடக்கு மாகாண சுற்றுலா பணியகம் மற்றும் வலி. வடக்கு பிரதேச சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் அலையோடு உறவாடு... என்ற தொனிப்பொருளில் உணவு திருவிழா நேற்று நடைபெற்றது.

காங்கேசன்துறை கடற்கரையில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பாரம்பரிய உணவுகள், உள்ளூர் உற்பத்தி பொருட்கள் என்பவற்றின் விற்பனை இடம்பெற்றது. அத்துடன், சிறுவர்களுக்கான மகிழ்வூட்டும் விளையாட்டுகள், இன்னிசை கச்சேரி என்பவையும் நடைபெற்றன. (ஐ)

## புதையல் தோண்டிய இருவர் கைது!

கொழும்பு, டிசெ. 29

கலவானை - துனுமாகல பகுதியில் புதையல் தோண்டிய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலவானை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து அகழ்வாராய்ச்சி உபகரணங்கள் மற்றும் பலி பீடப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் 25 மற்றும் 46 வயதுடைய, நாவலகந்த பகுதியை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

கலவானை பொலிஸர், இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

## ஒளி பெற்றது கல்லுண்டாய் வீதி



யாழ்ப்பாணம், டிசெ. 29

கல்லுண்டாய் வீதிக்கு மின் விளக்குகளை நேற்று முன்தினம் வலி. மேற்கு பிரதேச சபை பொருத்தியுள்ளது.

கல்லுரண்டாய் வீதியில் இரவு வேளைகளில் விபத்துகள், வழிப்பறி கொள்ளை போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றை தடுக்கும் நோக் கிலேயே அந்த வீதிக்கு மின் விளக்குகள் பொருத் தப்பட்டன.

மாகாண அபிவிருத்தி நிதியிலிருந்து 93 இலட்சம் ரூபாய், வலி. மேற்கு பிரதேச சபையின் நிதி யிலிருந்து 4.28 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு புதிதாக மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. (ஐ)

## ரெலோவின் யாழ். மாவட்ட நிர்வாகம் தெரிவானது!

யாழ்ப்பாணம், டிசெ. 29

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவாகியுள்ளது.

இதன்படி, அந்த அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளராக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் ஒருமனதாகத் தெரிவானார். அத்துடன், பொதுக்குழு உறுப்பினர்களாக 45 பேர் தெரிவாகினர்.

இந்தத் தெரிவுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கச்சேரி அருகேயுள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

இதேவேளை, தமிழீழ விடுதலை இயக்கத்தின் 12ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் ஜனவரி 24, 25ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக வடக்கு, கிழக்கின் 8 மாவட்டங்களிலும் புதிய நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

## ஜனாதிபதி நிதியத்திடம் பெற்ற ரூ. 13 கோடி மீளப்பெறப்படவில்லை

கொழும்பு, டிசெ. 29

ஜனாதிபதி நிதியத்திலிருந்து 56 பாராளுமன்றம், மாகாண சபை உறுப்பினர்கள் சட்டதிட்டங்களை மீறி ரூ.13 கோடிக்கும் அதிகமான தொகையை மருத்துவ உதவியாக பெற்றுள்ளனர் என்று தேசிய கணக்காய்வு பணிமனை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவம், மாதாந்த வருமான வரம்பு, பிரதேச செய லாளரின் அறிக்கை, நிதி, சொத்துகள் மற்றும் மருத்துவ உதவி வரம்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் இந்த பண உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவிகள் 2005 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. மேலும், ஜனாதிபதி நிதியிலிருந்து கடன்களை வழங்குவதற்கான திட்டங்கள் இல்லாவிட்டாலும் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான மருத்துவ கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவை மீள வசூலிக்கப்படவில்லை.

முன்னாள் பிரதமர் ஒருவருக்கும் கிட்டத்தட்ட ரூ. 3 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிய வந்துள்ளது. (ஐ)

## நாட்டின் ஒருமைப்பாட்டை அரசு சீர்குலைக்கக்கூடாது

ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி



யாழ்ப்பாணம், டிசெ. 29

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் திட்டமிட்டு சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் பௌத்த ஆலய கட்டுமானங்கள் ஒருபோதும் இலங்கையில் அமைதியைக் கொண்டுவராது. முறைமை மாற்றத்தை முன்வைத்து ஆட்சிப்பீடம் ஏறியுள்ள இடதுசாரி ஜனநாயகம் பேசும் இன்றைய அரசு அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி நாட்டின் நிலையான அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும் - என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் சிங்கள - பௌத்த மக்கள் வாழாத இடங்களில் அடாத்தாகப் பிடித்த பல காணிகளில் இராணுவத்தினரின் உதவியுடன் பௌத்தகோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்போது ஆட்சியிலிருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இவற்றைத் தடுத்து நிறுத்தாமல் சட்டவிரோதமாகக் கட்டப்படும் புத்த விகாரைகளை இன்னும் ஆதரித்து செயல்பட்டு வருகிறது.

வடக்கு - கிழக்கை பொறுத்தவரையில் பல இடங்களில், புராதான பௌத்த சின்னங்கள் இருக்கின்றன என்ற பெயரில் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு அங்கு புத்த கோயில்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இது பௌத்த நாடு, நாங்கள் விரும்பிய எதனையும் செய்யலாம் என்ற மனோபாவத்துடன் பெரும்பாலான புத்த பிக்குகளும் படையினரும் அவர்களுக்கு சாதகமான அரசியல்வாதிகளும் செயல்பட்டு வருவதானது நாட்டின் ஒற்றுமைக்குக் குந்தகமானது.

ஒருபுறத்தில் சமத்துவம், சகோதரத்துவம், இனங்களுக்கிடையில் ஐக்கியம் பற்றிப் பேசும் உங்கள் அரசாங்கம், இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் துணைபோவதென்பது நீங்கள் பேசுகின்ற விடயங்களை நிர்மூலமாக்குமே தவிர, நாட்டில் ஐக்கியத்தை உருவாக்காது - என்றுள்ளது. (ஐ)

# 11ஆவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

11ஆவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா நாளை செவ்வாய்க்கிழமை முதல் ஜனவரி 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அஜென்டா 14 நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிலோன் தியேட்டர்ஸ், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த விழா நடத்தப்படுகிறது.

திரைப்படங்கள் கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள றீகல் சினிமாஸ், களம், யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையம் என்பவற்றில் திரையிடப்படும்.

தொடக்கவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.15 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையத்தில் நடைபெறும். தொடக்க திரைப்படமாக பிரதீப் குர்பா இயக்கிய தி எலேசியன் பீல்ட் (The Elysian Field) திரையிடப்படுகிறது.

இம்முறை, 60இற்கும் மேற்பட்ட முழுநீள, ஆவண, குறும் படங்கள் திரையிடப்படவுள்ளன. இலங்கை, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, ஈரான், இத்தாலி, ஜப்பான், நேபாளம், பாகிஸ்தான், தென் கொரியா, சுவிற்சர்லாந்து, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா நாடுகளின் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

திரைப்பட பின்னோட்டம் இந்தியாவின் புகழ்பெற்ற மூத்த திரைப்பட இயக்குநர் ரித்விக் கட்டக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. நாளை மறுதினம் "ரித்விக் கட்டக்கின் வாழ்க்கையும் படைப்புகளும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு பேராசிரியர் அங்குரன் தத்தாவால் நிகழ்த்தப்படும். இலங்கை திரைப்பட இயக்குநர் விமுக்தி ஜயசுந்தரவின் 'Sulanga Enu Pinisa (கைவிடப்பட்ட நிலம்) திரைப்படமும் விழாவில் திரையிடப்படுகிறது.

விழாவின் நிறைவு நிகழ்வு எதிர்வரும் ஜனவரி 04ஆம் திகதி யாழ்ப்பாணம் காகில்ஸ் சதுக்கத்திலுள்ள றீகல் சினிமாஸில் நடைபெறும். இதில், இலங்கை திரைப்பட இயக்குநர் அசோக ஹந்தகமவின் 'Sanda Dadayama (நிலவு வேட்டை)' திரையிடப்படும்.

அத்துடன், மூத்த கலைஞர்களுக்கான கௌரவிப்பு விருது இளம் திரைப்பட உருவாக்குநர்களுக்கான ஊக்குவிப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.12.2023 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ஆட்சியாளர்களுடன் இணைந்திருந்த தமிழர்கள்

தென்னிலங்கை ஆட்சியாளர்களுடன் இணைந்திருந்த தமிழ் அரசியல் வாதிகள்மீதான விசாரணைகள் தமிழ் மக்கள் மத்தியில் எவ்வாறான பார்வையை ஏற்படுத்துகிறது - மகிழ்ச்சியடைகின்றனரா அல்லது எதைப் பற்றியும் மக்கள் கரிசனை கொள்ளவில்லையா?

ஆனால், இவ்வாறான அரசியல்வாதிகளின் கைதுகள் தேர்தல் அரசியலில் அவர்களை போட்டியாகக் கருதுபவர்களுக்கு நிச்சயம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஈஸ்டர் குண்டு வெடிப்புத் தொடர்பான விவகாரத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பில் தனக்கெனத் தனியானதொரு வாக்குவங்கியை உருவாக்குவதில் வெற்றி பெற்றிருந்த சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கைது செய்யப்பட்டு, சிறையில் இருக்கிறார். பிள்ளையானின் வளர்ச்சியானது, உடனடியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கே அச்சுறுத்தலாக இருந்தது. இந்தப் பின்புலத்தில் பிள்ளையானின் கைதின் உடனடி நன்மைக்குரியவர்கள் தமிழ் அரசு கட்சியினர்தான்.

இந்த நிலையில் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கி பாதாள உலகக் குழுவிடம் சென்றமை தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவர்கள் இருவருமே ராஜபக்ஷ க்களின் ஆட்சியில் தேனிலவில் இருந்தவர்கள். டக்ளஸ் தேவானந்தா, ரணசிங்க பிரேமதாஸ காலத்திலிருந்து ஒதென்னிலங்கை ஆட்சியாளர்க ளோடு இணைந்துதான் அரசியலை முன்னெடுத்து வந்தவர். அரசாங்கங்க ளுடன் இணைந்து செயல்படுவதையே அவரின் அரசியல் நிலைப்பாடாகவும் கொண்டிருந்தவர். பிள்ளையான் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறியமையைத் தொடர்ந்து ராஜபக்ஷக்களின் அரவணைப்பில் அரசியல்வாதியானவர். பிள்ளையானின் அரசியல் வளர்ச்சி என்பது ராஜபக்ஷக்களால்தான் நடந்தேறியது.

இவ்வாறான கைதுகள் உணர்த்துவது என்ன? எல்லாக் காலத்திலும் ஆளும் தரப்பின் அனுரசணையில் அரசியலில் கோலோச்ச முடியாது. ஆளும் தரப்புகளுக்கு என்னதான் விசுவாசமாக இருந்தாலும்கூட, அவர்களுடைய நிகழ்ச்சிநிரலுக்குள் முற்றிலுமாக கரைந்து போவதானது ஒரு கட்டத்தில் காப்பாற்றுவதற்கு ஆளற்ற நிலைமையையே உருவாக்கும்.

ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இருந்திருந்தால் இவ்வாறானதொரு நிலைமையை கற்பனை செய்யக்கூட முடியாது. ஏனெனில், அவர்கள் தங்களுடைய தேவைக்காக இவர்களுடைய பாதுகாவலர்களாக இருந்திருப் பார்கள். ஆனால், தேசிய மக்கள் சக்தி தமிழ் அரசியல்வாதிகளை முகவர்களாகக் கொண்டு தமிழ் மக்களிடத்தில் வரவில்லை. இதுதான் ஏனைய தென்னிலங்கைக் கட்சிகளுக்கும் ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கும் உள்ள வேறுபாடு.

இதனால்தான் அவர்களுக்கு டக்ளஸ் தேவானந்தாவோ அல்லது பிள்ளையானோ தேவைப்படவில்லை. முகவர்களின் ஊடான தமிழ் அரசியலை அவர்கள் விரும்புவதாகவும் தெரியவில்லை. மாறாக, நேரடியாகவே தமிழ் மக்களுடன் நெருங்கவே முற்படுகின்றனர். இவ்வாறான கைதுகள் ஊடாக சட்டத்துக்கு முன்னால் அனைவரும் சமம் என்னும் நிலைப்பாட்டையே அரசியலாக்க முயற்சிக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்கவின்மீது கைவைத்ததன் மூலம் தகுந்த ஆதாரங்கள் இருந்தால் எவரையும் சட்டத்துக்கு முன்னால் நிறுத்துவோம் என்பதே அவர்களுடைய நிலைப்பாடாக இருக்கிறது.

# இடைத்தங்கல் முகாம்களிலிருந்து மக்கள் பலவந்தமாக வெளியேற்றம்

## லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 29

இயற்கை அனர்த்தங்க ளால் கண்டி மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட் டுள்ளது. இம்மாவட்டத்தில் தற்போதும் சுமார் 6,000இற் கும் மேற்பட்டோர் இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தற் காலிக இருப்பிடங்கள் கூட அமைத்து கொடுக்கப்படாத நிலையில், அவர்கள் இடைத் தங்கல் முகாம்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் லக்ஷ் மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் அவர் இவ் வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

அனர்த்தங்களால் மலை யகத்துக்கு, குறிப்பாக கண்டி மாவட்டத்துக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. அனர்த்த நிவாரணப் பணிக ளுக்காக ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் அரசாங்கத் துக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ள போதிலும், வாக்குறுதியளிக்கப்பட்ட நிவாரணங்கள் மிகவும் மந்த கதியிலேயே கிடைக்கின்றன.

கண்டி மாவட்டத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப் பட்ட 55, 804 குடும்பங்கள் உள்ள போதிலும், வாக்கு றுதியளிக்கப்பட்ட 25,000 ரூபாய் கொடுப்பனவு 32,170 குடும்பங்களுக்கு மாத்திரமே கிடைத்துள்ளது. இன்னும் 23,000 குடும்பங்களுக்கு அந்த நிவாரணம் கிடைக்க வில்லை- என்றார். (எ)

# சட்டவிரோத பொருட்களுடன் கட்டுநாயக்கவில் மூவர் கைது

கொழும்பு, டிசெ. 29

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 86 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களுடன் மூவர் நேற்று முன்தினம் விமான நிலைய சுங்க அதிகாரிக ளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு கட்டுநாய க்க விமான நிலைய வருகை முனையத்தின் "பசுமை வழித்தடம்" பகுதியில் முன்னெடுக்கப் பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர் கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் நீர்கொழும்பு பிரதேச த்தை சேர்ந்த 58 வயது வர்த்தகர் எனவும் மற் றைய இருவரும் பண்டாரவளை பிரதேசத்தை சேர்ந்த 38 வயது பெண் வர்த்தகர்கள் எனவும் தெரியவருகிறது.

இந்த இரண்டு பெண்களில் ஒருவர் நோய் வாய்ப்பட்டிருப்பதாக காண்பிப்பதற்காக சக்கர நாற்காலியில் அமர்த்தப்பட்டு மற்றைய பெண்ணால் தள்ளிக்கொண்டு விமான நிலைய "பசுமை வழித்தடம்" ஊடாக செல்லும் போது, அவர்களின் சந்தேகத்துக்கிடமான நடத் தையை அவதானித்த சுங்க அதிகாரிகள் இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அவர்களின் பயணப் பொதிகளிலிருந்து வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட "மென் செஸ்டர்" ரக சிகரெட்கள் 44, 000 அடங்கிய 220 சிகரெட் பெட்டிகள், 19 வெளிநாட்டு மதுபான போத் தல்கள், சுகாதார அமைச்சு மற்றும் தேசிய ஔட தங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனும தியின்றி அழகுக் கலைக்கு பயன்படுத்தப்படும் 430 கொலாஜன் பைக்கற்கள், காலணிகள் மற்றும் வர்த்தக பொருட்கள் என்பன சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பாடசாலை அதிபர் தாக்கியதில் மாணவன் மருத்துவமனையில்

## பொலிஸார் மீது பெற்றோர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 29

சூரியவெவ பிரதேசத்தில் உள்ள பாட சாலை ஒன்றின் அதிபர் தாக்கியதில் காய மடைந்த மாணவன் ஒருவர், கடந்த சில நாட் களாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து சூரியவெவ பொலிஸில் முறைப்பாடு செய்த போதிலும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என பாதிக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிபரின் மனைவி தேசிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினராக பதவி வகிப்பதே இதற்கு காரணம் என அவர் கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

குறித்த 16 வயது மாணவன், கடந்த 8 நாட் களாக அம்பாந்தோட்டை பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சூரியவெவ பொலிஸாரால் தமது பிள் ளைக்கு நீதி கிடைக்காத காரணத்தால் மாத் தறை - அம்பாந்தோட்டை பகுதிகளுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரி டம் இது குறித்து முறைப்பாடு செய்துள்ள தாக மாணவனின் பெற்றோர் தெரிவித்தனர்.

பிள்ளை ஏதேனும் தவறு செய்திருந்தால் அதற்குரிய தண்டனை வழங்கப்பட வேண் டுமே தவிர, இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் தாக்குவதை ஏற்றுக்கொள்ள முடி யாது என மாணவனின் தாய் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் ஜனாதிபதி ஆகியோரிடமும் முறைப்பாடு செய்ய எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். முன்னேறும் நாள்.

**இடபம்**
உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும்படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். லாபம் பெருகும் நாள்.

**மிதுனம்**
சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். முயற்சிகளில் வெற்றி பெறும் நாள்.

**கடகம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றி கொள்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். அதிகாரிகள் குறை கூறுவார்கள்.

**கன்னி**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்த்த வேலைகள் முடியும்.

**துலாம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை மதித்து பேசுவார்கள். அமோகமான நாள்.

**தனுசு**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**
கணவன்- மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தை கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

# நெடுந்தீவில் 3 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 29

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை குறித்த இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, அவர்கள் பயணித்த படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைதானவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை சேர்ந்த மீனவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். (எ)

# இடர்காலத்தில் சிறந்த சேவையாற்றிய கிராம உத்தியோகத்தருக்கு கௌரவிப்பு





யாழ்ப்பாணம், டிசெ. 29

பொன்னாலை கிராம உத்தியோகத்தர் சிவரூபனுக்கான கௌரவிப்பும் நத்தார் கொண்டாட்டமும் நேற்று முன்தினம் மலரும் மூளாய் அபிவிருத்தி மையத்தில் நடைபெற்றது.

குறித்த கிராம உத்தியோகத்தர் இடர் காலத்தில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர் என்ற ரீதியில், மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இதன்பின்னர் மாணவர்களுக்கு நத்தார் பரிசில்களும் வழங்கப்பட்டன.

(எ-05)

# 3,012 குடும்பங்களுக்கு மலசல கூடம் இல்லை

## யாழ். மாவட்ட செயலக கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். மாவட்டத்தில் 3,012 குடும்பங்கள் மலசல கூடம் இன்றி வாழ்ந்து வருவதாக தகவல் வெளியிடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி கூட்ட கலந்துரையாடலின் போது பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் வழங்கும் போதே இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு - சாந்தை கிராமத்தில் பல குடும்பங்கள் மலசல கூடங்கள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் அவர்களின் சுகாதார பிரச்னை தொடர்பில் அபிவிருத்தி குழு கூட்டத்தில் றஜீவன் எம். பி. கேள்வி எழுப்பினார்.

இந்த பகுதி மக்களுக்கு மலசல கூடங்களை அமைத்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தார்.

இதன்போது, யாழ். மாவட்டத்தில் 3,012 குடும்பங்கள் மலசல கூடங்கள் இன்றி காணப்படுவதாக மாவட்ட புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாக துறை சார் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. (எ-05)

# உள்ளக விளையாட்டு அரங்குக்கு ஒதுக்கிய பெரும் நிதி திரும்புகிறது

## ரூ. 169 மில்லியன் கட்டடங்கள் திணைக்களத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங்கை நிர்மாணிப்பதற்காக அமைச்சால் ஒதுக்கப்பட்ட சுமார் 169 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்படாமல் கட்டடங்கள் திணைக்களத்துக்கு மாற்றப்படவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலில் உள்ளக விளையாட்டு அரங்கு தொடர்பான கேள்வியின் போது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளக விளையாட்டு அரங்கு தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் இடம் பெற்றுவருவது யாவரும் அறிந்த விடயம்.

நீதிமன்றில் வழக்கு இடம் பெறுகின்ற காரணத்தால் வழக்கு நிறைவடையாமல் கட்டுமானங்களை மேற்கொள்ள முடியாத நிலையில் குறித்த நிதியை கட்டடங்கள் திணைக்களத்துக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற தீர்ப்பில் கட்டுவதற்குரிய உத்தரவு கிடைக்குமாயின் அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும். இல்லாவிட்டால் மாற்றுக்காணி ஒன்றை தெரிவு செய்து உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என்றார்.

(எ-05)

# "சாட்டி மயானத்தில் எரிவாயு தகன மேடை"

யாழ்ப்பாணம், டிசெ. 29

மின்சாரம் அல்லது எரிவாயு தகன மேடை ஒன்றை வேலணை சாட்டி இந்து மயானத்தில் அமைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் இவ்வாண்டுக்கான இறுதி சபை அமர்வு தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, இவ் விடயம் குறித்து முன்மொழிவொன்றை சபையில் சமர்ப்பித்த அனுசியா மேலும் கூறுகையில்,

மயானங்களின் மேம்பாடும் காலத்துக்கேற்ற வகையில் மாறுபடல் அல்லது புதியதையும் உள்வாங்கல் அவசியமாகின்றது.

இதேநேரம் பாரம்பரிய மயானங்களில் விறகு தகன மேடைகள் இருப்பதால் அதிகளவு மரங்கள் அழிக்கப்படு இன்று பூவரச மரங்கள் கூட அற்றுவரும் நிலை காணப்படுகின்றது.

இதேவேளை, இந்த எரிவாயு தகன மேடை வெப்பநிலை மற்றும் எரிபொருள் பயன்பாட்டில் அதிக கட்டுப்பாட்டை கொண்டிருப்பதால் தகனம் சீரானதாகவும் முழுமையாகவும் திறன்மிக்கதாகவும் நடைபெறு கிறது.

விறகுகளை பயன்படுத்துவதை தவிர்ப்பதால், மரங்கள் வெட்டப்படுவது குறைக்கப்படுகிறது. அதுவும் மரங்கள் பாதுகாப்புக்கு உந்துதலாக இருக்கின்றது. இது வனப்பாதுகாப்புக்கு உதவுகிறது.- என்றார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி வெடித்து ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 29

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

மதவாச்சி - உடும்புகலவத்தை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கி வெடித்ததில் காயமடைந்த குறித்த நபர் செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் துப்பாக்கி வெடித்ததில் குறித்த நபர் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சடலம் வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 10 வெளிநாட்டு பெண்கள் கைது!

கொழும்பு, டிசெ. 29

விபசாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 3 வெளிநாடுகளை சேர்ந்த 10 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுள்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் குறித்த விபசார நிலையம் இயங்கியதாகக் கூறப்படுகிறது.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, அந்த இடம் சோதனை நடத்தப்பட்டு குறித்த பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான பெண்களில் ஒருவரிடமிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்களும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, டிசெ. 29

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் கம்பஹா - மினுவாங்கொடை பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, மகஸின், ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 25 தோட்டாக்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 43 வயதுடையவர் எனவும் அவர் மினுவாங்கொடை - ஹீனட்டியன பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சுற்றுலாவிகள் வருகை 23 இலட்சத்தை கடந்தது

கொழும்பு, டிசெ. 29

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 23 இலட்சத்தை கடந்துள்ளது.

நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் சுமார் 23 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்த முயன்ற 6 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 29

கம்பஹா - சீதுவையில் இரவு விடுதி ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகக் கூறப்படும் குழுவை தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 6 பெற்றோல் குண்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைதானவர்களில் குறித்த நிறுவனத்தின் முகாமையாளர், வர்த்தகர் ஒருவர், 3 முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் மற்றொரு நபர் அடங்குவர்.

சம்பவம் தொடர்பாக மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## கடல் அலை இழுத்துச் சென்ற தம்பதியர் காப்பாற்றப்பட்டனர்

கொழும்பு, டிசெ. 29

காலி - ஹிக்கடுவை - நரிகமவில் கடலலை இழுத்துச் சென்ற வெளிநாட்டு தம்பதி பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை பதிவாகியுள்ளது.

ஹிக்கடுவை பொலிஸ் உயிர் காக்கும் பிரிவைச் சேர்ந்த சார்ஜென்ட் ஏக்கநாயக்க, கான்ஸ்டபிள் மிகிந்து, பண்டார மற்றும் திஸநாயக்க ஆகியோர், குறித்த தம்பதியரை மீட்டு அடிப்படை முதலுதவி சிகிச்சை அளித்துள்ளனர்.

பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த 23, 20 வயதுடைய தம்பதியரே இவ்வாறு காப்பாற்றப்பட்டனர். (ஐ)

## நத்தாரையொட்டி கைதிகளுக்கு விரைவில் பொது மன்னிப்பு!

கொழும்பு, டிசெ. 29

நத்தாரையொட்டிய பொது மன்னிப்பின் கீழ் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நத்தார் தினத்தன்று கைதிகள் விடுதலை நடைபெறாத முதல் சந்தர்ப்பம் இந்த ஆண்டு ஆகும். இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செய்தி தொடர்பாளர் ஜெகத் வீரசிங்க,

விடுதலைக்கு தகுதியான கைதிகளின் பட்டியல் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அமைச்சகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கைதிகள் தொடர்பான கூடுதல் அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன.

நிர்வாக நடைமுறைகள் முடிந்ததும் நத்தாரையொட்டிய பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய அனுமதிக்கப்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்படுவர் - என்றார். (ஐ)

## குற்றங்களுடன் தொடர்பு; 543 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, டிசெ. 29

பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 543 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களில் 22 பேர் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேநேரம், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 228 பேரும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட126 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மதுபோதையில் வாகனம் செலுத்திய 384 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 42 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து விதிகளை மீறிய4 ஆயிரத்து 506 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரயில் காரை மோதியதில் மூவர் படுகாயமடைந்தனர்

கொழும்பு, டிசெ. 29

ரயில் வரும் சமிக்ஞையை புறக்கணித்து பயணித்த காரை ரயில் மோதியதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொஸ்கம - பியகம பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பெலியத்தயிலிருந்து மருதானை நோக்கி பயணித்த அதிவேக ரயிலே காரை மோதியது.

இந்த விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்து பலப்பிட்டி, கராப்பிட்டி போதனா மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

ரயில் வரும் சமிக்ஞையை புறக்கணித்து கார் பயணித்த நிலையில் இந்த விபத்து இடம்பெற்றது. காரில் பயணித்த தந்தை, மகன், அவர்களின் உறவினர் ஒருவரே இவ்வாறு காயமடைந்தனர்.

விபத்து குறித்து கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை இலங்கை தமிழ் அரசுக்கட்சி கைவிடாது

## சிறிநாத் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 29

தமிழ் மக்களின் மிக முக்கிய கோரிக்கையான சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை இலங்கை தமிழ் அரசுக்கட்சி ஒருபோதும் கைவிடாது என்று பாராளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

பிராந்திய அரசியலில் இந்தியாவை மீறி எந்த விடயங்களையும் செய்ய முடியாது என்பது கடந்த கால அரசியல் போராட்ட வரலாற்றில் எங்களுக்கு நன்றாக தெரியும்.

எனவே, குறைந்த தீர்வாக இந்தியா கொண்டு வந்த 13ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாண சபை அதிகாரத்தை பெற்று அதை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டு அடுத்த கட்ட நகர்வுகளை செய்ய வேண்டும்.

அதேவேளை, தமிழ் மக்களின் மிக முக்கியமான கோரிக்கை சமஷ்டி முறையிலான தீர்வாகும்.

அதனை ஒருபோதும் தமிழ் அரசுக் கட்சி விட்டுக்கொடுக்காது.

புதிய ஆண்டு பிறக்கும் நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் எதிர்பார்ப்புகள், அபிவிருத்தி வாழ்வாதாரங்கள் முற்று முழுதாக கொண்டு செல்லப்பட்டுள்ளதா? என்று பார்த்தால் ஓர் ஏமாற்றமான நிலைமையே மிஞ்சி இருக்கின்றது.

டித்வா புயல் தமிழ் மக்களுடைய பிரதேசங்களிலும் மிகப் பெரிய அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

போர்க்காலப் பகுதியில் சிதைக்கப்பட்ட கட்டுமானங்கள் இன்னும் மீண்டெழ முடியாத அளவுக்கு தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களை பெரிதும் பாதித்திருக்கின்றன.

தற்போது இந்த புயல் காரணமாகவும் மக்களின் நிலை மேலும் மோசமாகியுள்ளது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆகக் குறைந்த தீர்வாக 13ஆவது திருத்தத்தின் ஊடாக வழங்கப்பட வேண்டிய மாகாண சபை அதிகாரங்கள் கூட பாரியளவில் இழுத்தடிப்பு செய்யப்பட்டிருக்கின்றது

மிக இலகுவாக பாராளுமன்றத்தின் அனுமதியுடன் செய்யக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது.

13ஆவது திருத்தத்தின் ஊடான இந்த மாகாண சபையை நாம் முதல் மிக வெற்றிகரமாக அதன் முழுமையான அதிகாரங்களை பயன்படுத்திக் கொண்டு அடுத்த கட்ட அரசியல் நகர்வாக செய்ய வேண்டும் என்பதே யதார்த்த கள அரசியலாகும் - என்றார்.

(எ)

# கல்முனை பிராந்தியத்தில் டெங்கு பரவும் அபாயம்

கல்முனை, டிசெ. 29

மழையுடனான சீரற்ற கால நிலை காரணமாக கல்முனை பிராந்தியத்தில் டெங்கு நுளம்புகள் வேகமாக பெருகும் அபாயம் நிலவுவதுடன், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழையுடனான காலப்பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பது வழக்கமாகும். இதனால், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, பொது மக்கள் தங்களது வீடுகளையும் சுற்றுச்சூழலையும் சுத்தமாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

குறிப்பாக, வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் பொலித்தீன் உறைகள், சிரட்டைகள், யோக்கட் கப்கள், மட்பாண்டங்கள், பழைய ரயர்கள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், போத்தல்கள் உள்ளிட்ட ஏனைய கழிவுப் பொருட்களையும் முறையாக அகற்றுவதுடன், நீர் தேங்கி நிற்கக்கூடிய அனைத்து இடங்களையும் அடிக்கடி பரிசோதித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

வீடுகள் மட்டுமன்றி, அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் பொது இடங்களிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன.

எனவே, அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பொறுப்பதிகாரிகள் தமது வளாகங்கள் நுளம்புகள் அற்ற பாதுகாப்பான இடங்களாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பிராந்திய பணிமனையின் கீழ் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே, பிராந்தியத்திலுள்ள மக்கள் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் பிராந்திய பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 29

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிக ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் மூடுபனி நிலவக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்பதோடு, மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய விபத்துகளை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(எ)

# இராட்சத முதலை உயிரிழப்பு!

மட்டக்களப்பு, டிசெ. 29

மட்டக்களப்பு, காத்தான்குடி வாவியில் மனிதர்களையும் விலங்குகள், பறவைகளை பிடித்து உணவாக உட்கொண்டு நீண்ட நாட்களாக அட்டகாசம் புரிந்து வந்த இராட்சத முதலை நேற்று முன்தினம் காலை இறந்த நிலையில் கரையொதுங்கியது. பல மாடுகள், ஆடுகள், நாய்கள், பூனைகளை இந்த முதலை இழுத்து சென்றது. இந்த இராட்சத முதலையை பிடிக்க மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களம், காத்தான்குடி நகர சபை உன்ன வாவியோரத்தில் கூட்டினை பொருத்தி முயற்சிசெய்த போதிலும் முடியாமல்போனது. இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை இறந்த நிலையில் முதலை கரையொதுங்கியது. சுமார் 12 அடி நீளமுள்ள இந்த முதலையால் வாவியோரத்தை அண்டி வாழும் மக்கள் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# "மலையக மக்களிடம் மட்டுமே உதவி செய்யும் மனிதநேயம்"



நுவரெலியா, டிசெ. 29

டித்வா சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக் கரம் நீட்டிய மனிதநேயம் என்பது மலையக மக்களிடம் மாத்திரம் இருப்பதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்தார். நேற்று முன்தினம் சனிக்கிழமை பொகவந்தலாவ கொடாடியாகலை என். சி. தோட்ட தொழிலாளர்களால் டித்வா நிவாரண பணிக்கு தொழிலாளர்களின் ஒருநாள் வேதனத்தை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

எமது மக்களிடம் உள்ள மனிதாபிமானத்தை வசதி படைத்தவர்களிடம் இருந்தோ அல்லது வசதி படைத்த அமைப்புகளிடம் இருந்தோ பெற்றுக்கொள்ள முடியாது. இந்த குணம் நம்மிடம் மாத்திரமே உள்ளது. தேர்தல் காலங்களில் குழுவாக பிரிந்து செயல்படும் நாம் அனர்த்தம் ஏற்படும் போது அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுகிறோம். ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்க்கையை மீளப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் செயல்படுகின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க மலையக மக்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தை இந்த அரசாங்கம் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறது -என்றார்.

# ஹக்கல தேசிய தாவரவியல் பூங்கா சுற்றுலாப் பயணிகளுக்காக திறப்பு

பதுளை, டிசெ. 28

ஹக்கல தேசிய தாவரவியல் பூங்கா சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்கள ஊழியர்களின் துரிதப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூங்கா நிலப்பரப்பில் அபாயகரமான அறிகுறிகள் தென்பட்ட இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பது, அபாய எச்சரிக்கை பலகைகள் மூலம் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நுழைவாயிலுக்கு அருகிலுள்ள குளங்களை கொண்ட பகுதி மற்றும் வனப் பகுதியை நோக்கிய நுழைவு வீதி என்பன இவ்வாறு அபாயகரமான இடங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

இதேவேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தாவரவியல் பூங்கா ஊழியர்களால் விசேட வேலைத்திட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய "டித்வா" புயல் காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலையால் மூடப்பட்டிருந்த ஹக்கல தாவரவியல் பூங்காவை விரைவாகத் திறப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக, கடந்த 12 ஆம் திகதி சுற்றாடல் பிரதி அமைச்சர் அன்ரன் ஜெயக்கொடி பூங்காவுக்கு கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

(எ)

# மகிழவெட்டுவான் கிராமத்துக்குள் நுழைந்த 20இற்கும் அதிக யானைகள்

மட்டக்களப்பு, டிசெ. 29

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான், நரிப்புல்தோட்டம் பிரதேசங்களில் பல நாட்களாக காட்டு யானைகள் பிரச்னை அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதனால், பயன் தரும் மரங்கள் பல அழித்துள்ளதோடு, இப்பிரதேச மக்களும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வேளையில் பொது மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய வெல்லாவெளி பகுதி வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் மட்டக்களப்பு வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் இணைந்து எடுத்த முயற்சியின் பலனாக பல்வேறு பிரயத்தனங்களுக்கு மத்தியில் பாதுகாப்பாக காட்டு யானைகள் வனப்பகுதிக்குள் அனுப்பப்பட்டன.

(எ)

# குடும்பஸ்தர் அடித்து கொலை

கொழும்பு, டிசெ. 29

அயலவருடனான தர்க்கம் முற்றியதில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

இரத்தினபுரி - அயகம - சமருகம பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 57 வயதான நபரே அடித்துக் கொல்லப்பட்டார்.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் இரத்தினபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 40 வயதுடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கில்...

அவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 26ஆம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். 2001ஆம் ஆண்டு இராணுவத்தால் அவரின் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட துப்பாக்கி திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் மாகந்துர மதூஷின் தகவல்களுக்கு அமைய 2019ஆம் ஆண்டு கம்பஹா - வெலிவேரிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தத் துப்பாக்கியின் இலக்கங்கள் சோதிக்கப்பட்டபோது, அது டக்ளஸ் தேவானந்தாவுக்கு இராணுவத்தால் சட்டரீதியாக வழங்கப்பட்டது என ஆரம்பகட்ட விசாரணையில் கண்டறியப்பட்டது. இது தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு வாக்குமூலம் அளிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை அழைக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா அன்றைய தினமே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சமஷ்டி...

சந்தித்தபோது சமஷ்டி தீர்வு குறித்து வலியுறுத்தினேன். அத்துடன், இந்த சந்திப்பில் அமைச்சரிடம் மனு கையளிக்கப்படவில்லை எனவும் உயர்ஸ்தானிகரிடமே அது கையளிக்கப்பட்டதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார். இவ்வாறான சந்திப்புகளில் அமைச்சர் மனுவை கையேற்பதில்லை என்ற இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அறிவுத்தலுக்கமைய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடமே கையளிக்கப்பட்டது.

சந்திப்பின் அடிப்படை நோக்கம், தேவையற்ற காலதமாதமாகியுள்ள மாகாண சபைகள் தேர்தலை நடத்த இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா வலியுறுத்த வேண்டும் என்பதே. மாகாண சபைகள் தேர்தலை நடத்த நானும் ஏனையவர்களும் வலியுறுத்தினோம். சமஷ்டியை பற்றி நாங்கள் பேசவில்லை என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தமை ஆச்சரியமளிக்கிறது.

கலந்துரையாடலை ஆரம்பித்தது நானே. கலந்துரையாடலின் இறுதியில் சமஷ்டி பற்றிப் பேசினோம். பல விடயங்களை பேசினோம். சந்திப்பு முடியுறும் தருணத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு நாம் முன்வைத்த கடிதத்தின் நோக்கத்தை மீண்டும் ஜெய்சங்கருக்கு தெளிவுபடுத்தினோம். மாகாண சபைகளைப் பொறுத்தவரை இந்தியா இலங்கையுடன் செய்த ஒப்பந்தம் மூலமே அது உருவானது. வயிற்றில் பிறந்த பிள்ளை என சொல்லவில்லை. இந்தியாவின் சிந்தனையில் வந்த பிள்ளை என்றேன். அதை வலியுறுத்தவே மனுவும் கையளித்தோம்.

இதேபோன்று, குறித்த சந்திப்பில் எமது இறுதி இலக்கும் - நோக்கும் கூட்டாட்சியான சமஷ்டிதான் என்பதை தெரிவித்தோம். நாம் அளித்த மனுவிலும் இந்த விடயம் இருக்கிறது. நாங்கள் பொய் சொன்னதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்கிறார். நான் உண்மையைத்தான் கூறுகிறேன். சந்திப்பில் பங்கேற்ற ஏனைய கட்சிகளின் தலைவர்கள் இதை தெளிவுபடுத்துமாறு வலியுறுத்தினார்கள்.

சர்வதேச ரீதியில், எமது இலக்கை அடைவதற்கான ஆதரவு தேவை. இந்தியா இதற்கு உதவ வேண்டும் என சந்திப்பில் சொன்னோம். நான் சொன்னது பொய் என்றால் இந்தியா மறுதலிக்கும். இராஜதந்திரிகள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல மாட்டார்கள். செயலிலேயே அதைச் செய்வார்கள்.

நாங்கள் சமஷ்டி கட்சி, ஆகவே சமஷ்டியை பற்றிப் பேசாமல் விடுவோமா? நாங்கள் சந்திப்பின் பிற்பகுதியில் அதனை வலியுறுத்தினோம். 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் முடக்கிப்போடும் என்று சொல்லிவிட்டு, கஜேந்திரகுமார் மாகாண சபைகள் தேர்தலில் போட்டியிடுவதாகச் சொல்கிறார். இது சுய முரண்பாடு. மாகாண சபைகள் முறைமை தீர்வு என்றோ - முழுமையாக ஏற்கிறோம் என்றோ ஒரு காலத்திலும் தமிழ் அரசுக் கட்சி சொன்னதில்லை. உண்மைக்கு புறம்பான முறையில் பேசுவது அரசியல் ஜனநாயகத்துக்கு முரண் - என்றார். (ஐ)

## 6 அமைச்சர்களின்...

குமார ஜெயக்கொடி, சுனில் ஹந்துன்னெத்தி, நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பிரதி அமைச்சரான சுனில் வட்டகல ஆகியோர் சொத்துகள் - அவை எவ்வாறு சேர்க்கப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகள் நடைபெறவுள்ளன என்று சிங்கள இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான குடிமக்கள் அதிகாரத்தின் தலைவர் ஜமுனி கமந்த துஷார ஆணைக் குழுவில் தாக்கல் செய்த முறைப்பாடு தொடர்பிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளன. இது, தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு ஜமுனி கமந்த துஷார நாளை செவ்வாய்க்கிழமை இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவில் முற்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார் என்றும் அந்த சிங்கள இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## ஊடக...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நாட்டில் ஜனநாயகம் மற்றும் ஊடகச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது ஊடகங்களுக்கு எதிராக செயல்படுகிறது. அரசாங்கத்தின் முறைகேடான செயல்பாடுகளை ஊடகங்கள் சுட்டிக் காட்டும் போது, அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை அரசாங்கத்துக்குக் கிடையாது. ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும். அரசாங்கத்துக்கு எதிராக மக்களை வீதிக்கு இறக்குவோம் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## வடக்கு...

வருமாறு,

முன்னர் குறிப்பிட்டபடி, தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் இந்தோனேசியாவின் மேற்கு பகுதியில் காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இது அடுத்து வரும் நாட்களில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி தாழமுக்கமாக மாற்றம் பெற்று இலங்கையின் கிழக்கு தென்கிழக்கு திசையில், இலங்கையின் கரையோரமாக நிலவி பின் இலங்கைக்கு தெற்காக மேற்கு நோக்கி நகர்ந்து குமரிக்கடலைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு நேற்று முதல் மழை கிடைக்கத் தொடங்கியுள்ளது.

இன்றும் வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. நாளை முதல் வடக்கு, கிழக்கு, வட மத்திய, தென், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மழை பரவலடையும் வாய்ப்புள்ளது.

நாளை மறுதினம் முதல் எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா வட மத்திய, மற்றும் தென் மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. இந்த நாட்களில் குறிப்பாக கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் மாகாணங்களின் சில பகுதிகளுக்கு மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

பதுளை, நுவரெலியா, காலி, மாத்தறை கண்டி மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களின் சில இடங்களில் நாளை மறுதினமும் ஜனவரி 01, 02, 03ஆம் திகதிகளிலும் 150 மி.மீ. க்கு மேற்பட்ட மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக, நாளை மறுதினம் கொஸ்லாந்தை, வெல்லவாய, புத்தள, கல்மதுல்ல, அப்புத்தளை, அதல போன்ற பகுதிகளிலும் ஜனவரி முதலாம் திகதி வெலிப்பிட்ட, கொரவின்ன, லபுகெங்கொட, மித்தெனிய, திருகோணமலை போன்ற பகுதிகளிலும், 2ஆம் திகதியன்று நாகெட்டிய, லெமஸ்தோட்ட, கொட்டபத்ம, ஏகொடவத்த, கொஸ்லாந்தை, வெல்லவாய, புத்தள, கல்மதுல்ல, அப்புத்தளை, அதல போன்ற பகுதிகளிலும் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது ( திகதி மற்றும் இடங்களில் சில மாற்றங்கள் நிகழக்கூடும் என்பதையும் கருத்தில் கொள்ளவும்)

இந்தக் கனமழை மத்திய, ஊவா மாகாணங்களின் பல பகுதிகளிலும் நிலச்சரிவு அனர்த்தத்தைத் தூண்டலாம். மலையக மக்கள் இந்த நாட்களில் கனமழையுடன் கூடிய நிலச்சரிவு அனர்த்தங்கள் தொடர்பில் மிக அவதானமாக இருப்பது அவசியம் - என்றுள்ளது. (ஐ)

## மாகாண...

ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

"உளளூராட்சி சபைத் தேர்தலில் வெல்லும்போது தேசிய மக்கள் சக்தி வலுவாக இருந்தது. அதனால்தான் உள்ளூராட்சி சபைகளில் வரவு- செலவுத் திட்டத்தை நிறைவேற்ற எதிரணி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர். எனினும், இந்த அரசாங்கம் ஓடாது, நிச்சயம் விழும் என எதிரணி உறுப்பினர்கள் நம்புகின்றனர். மக்கள் மத்தியில் அரசாங்கம் நம்பிக்கை இழந்து வருகிறது.

எனவே, மாகாண சபைகள் தேர்தலை இந்த அரசாங்கம் நடந்தாது. ஏனெனில், ஒரு சபையைக்கூட வெல்ல முடியாத நிலையே உள்ளது." - என்றும் கூறினார். (ஐ)

## அத்தியாவசிய...

மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, பராமரிப்பு, ஊட்டச்சத்து மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அம்புலன்ஸ் சேவைகள், பயணிகள் அல்லது பொருட்களை கொண்டு செல்வதற்கான பொதுப் போக்குவரத்து சேவைகள், நீர் வழங்கல் - வடிகால் தொடர்பான அனைத்து சேவைகளும் இதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விநியோகம், பாதுகாப்பு, விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளும் அனைத்து மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் தொடர்புடைய கள மட்ட அலுவலர்களால் செய்யப்பட வேண்டிய அனைத்து சேவைகளும் தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி, நீர் வழங்கல், மின்சாரம், கழிவுநீர் அமைப்பு, தீயணைப்பு மற்றும் ஆம்புலன்ஸ் சேவைகள், குப்பை சுத்திகரிப்பு மற்றும் உள்ளூர் அரசாங்க நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் குப்பை அகற்றல் உள்ளிட்ட அனைத்து அரசு வங்கி மற்றும் காப்பீட்டு சேவைகள் என்பன அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## இந்தியாவின்...

மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பு திட்டங்கள், இந்திய கடன் திட்டத்தின் கீழ் செய்ய வேண்டிய கொள்வனவுகள் - திட்டங்களை விரைவுபடுத்த இந்தியாவிலிருந்து மனிதவளத்தை பயன்படுத்துதல் குறித்து இந்தக் கூட்டு குழு முடிவு செய்யும் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

வீதிகள் மற்றும் ரயில், சுகாதாரம் மற்றும் கல்வி, வீட்டுவசதி, விவசாயம் மற்றும் உடனடி பேரிடர் மீட்புக் குழுவை நிறுவுதல் ஆகிய ஐந்து பிரிவுகளின் கீழ் 3 மாதங்கள், 6 மற்றும் 9 மாதங்களில் திட்டங்களை நிறைவுறுத்த கூட்டுக் குழு மூன்று காலக்கெடுக்களின் கீழ் செயல்படவுள்ளது.

வீட்டுவசதி, மருத்துவம், கல்வி, ரயில் மற்றும் வீதி அமைப்பு தொடர்பான மறுசீரமைப்பு திட்டங்களுக்கு, தொழில்நுட்ப ஆதரவு உள்ளிட்ட உதவிகளுக்கு இந்திய குழுக்கள் இலங்கையில் தங்கியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டங்களை நடத்துவது, முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வது பற்றிய கூட்டங்களை இந்திய தூதரகம் ஒருங்கிணைக்கும். முதல் கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அவசரகால..

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் பொது அவசரகால நிலைமையைக் கருத்தில்கொண்டு, பொதுப் பாதுகாப்பு மற்றும் நாட்டின் இயல்பு நிலையைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பேணுவதற்காக இந்த பொது அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தாளையடி...

போனார் என்று கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியை சேர்ந்த மீனவர்கள் காணாமல் போனவரை தேடும் பணியில் ஈடுபட்டனர். எனினும், நேற்றிரவு வரை காணாமல் போன இளைஞர் மீட்கப்படவில்லை. (ஐ)

## மருந்து...

என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

பதுளை - மகியங்கனை ஆதார மருத்துவமனைக்கு நேற்றைய தினம் 46.5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், சில வருடங்களுக்கு முன்பு, இந்த நாட்டில் மிகவும் ஊழல் நிறைந்த - மோசடியான தரமற்ற மருந்து மோசடி நடந்துகொண்டிருந்த வேளை, அதை நாட்டுக்கு வெளிக்கொணர்ந்து, அம்பலப்படுத்தி, அப்போதைய சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக்கூட ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டு வந்தது.

ஐக்கிய மக்கள் சக்தி தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் தொடர்பில் குரல் எழுப்பிய சமயங்களில், தற்போதைய அரசாங்கத்தைச் சேர்ந்த அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட ஆதரவு தெரிவித்து மௌனம் காத்து வந்தனர். தரமற்ற மருந்துப் பொருட்கள் கொள்வனவை நிறுத்துவோம் என்று தேர்தல் மேடைகளில் கோஷங்களை எழுப்பிய தற்போதைய ஆளும் தரப்பு அமைச்சர்கள், இன்று மக்களுக்கு தரமற்ற மருந்துகளையும் தடுப்பூசிகளையும் விநியோகித்து வருகின்றனர். தற்போதைய சுகாதார அமைச்சர் உட்பட அனைத்து சுகாதார அதிகாரிகளும் இந்த மருந்துப் பொருட்கள் மாபியாவை இல்லா தொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## புகழ்பூத்த...

இயங்கி இளையோருக்கு வழிகாட்டினார். அத்துடன், உரும்பிராய், திருநெல்வேலியில் முன்பள்ளி சிறாருக்காக "கிட்ஸ் பார்க்" என்னும் முன்பருவ கல்வி நிறுவனத்தையும் தொடர்ந்து நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ரூ. 4.9 இலட்சம் கோடியை கடந்தது அரச வருமானம்

கொழும்பு, டிசெ. 29

**நடப்பு ஆண்டின் முதல் 11 மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வரி வருமானம் 4 இலட்சத்து 94 ஆயிரத்து 580 கோடி ரூபாய் என நிதி அமைச்சு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சுங்கத்தின் ஊடாக 2 இலட்சத்து 22 ஆயிரத்து 300 கோடி ரூபாய் வருமானமும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஊடாக 2 இலட்சத்து 10 ஆயிரத்து 500 கோடி ரூபாயும் மதுவரித் திணைக்களத்தின் ஊடாக 21 ஆயிரத்து 300 கோடி ரூபாயும் ஏனைய திணைக்களங்கள் ஊடாக 7 ஆயிரம் கோடி ரூபாயும் வருமானமாக பெறப்பட்டுள்ளது.

இதில், வாகன இறக்குமதி மூலம் ஈட்டப்பட்ட வரி வருமானம் 41 ஆயிரத்து 50 கோடி ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இது கடந்த 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 35 ஆயிரத்து 500 கோடி ரூபாயால் அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் வாகன இறக்குமதியின் ஊடாக 5 ஆயிரத்து 460 கோடி ரூபாய் வருமானமாக பெறப்பட்டிருந்தது.

இதேவேளை 2025 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் மொத்த அரச வருமானம் 35.5 சதவீதத்தால் அதிகரித்து 4 இலட்சத்து 94 ஆயிரத்து 580 கோடி ரூபாயாகப் பதிவாகியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தத் தொகை 3 இலட்சத்து 65 ஆயிரத்து 90 கோடி ரூபாயாகக் காணப்பட்டது. (ஐ)

# 6 ஏக்கர் கஞ்சா தோட்டம் பதுளையில் பிடிபட்டது!

கொழும்பு, டிசெ. 29

6 ஏக்கரில் பயிரிடப்பட்ட கஞ்சா தோட்டம் பிடிக்கப்பட்டுள்ளது.

இராணுவ புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பதுளை - அப்புத்தளை - ஹல்துமுல்லை பகுதியில் இந்தத் தோட்டத்தை பொலிஸார் பிடித்தனர்.

அறுவடை செய்யும் நிலையிலிருந்த அந்தத் தோட்டத்தில் 3.2 இலட்சத்துக்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த கஞ்சா தோட்டத்தை பயிரிட்டவரை கண்டறியும் நோக்கில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# போதைப்பொருட்களுடன் 840 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 29

போதைப்பொருளை ஒழிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 840 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளில் 378 கிராம் ஹெரோயின், 417 கிராம் ஐஸ், 554 கிராம் கஞ்சா, 4 இலட்சத்து 2 ஆயிரத்து 22 கஞ்சா செடிகள், 9 கிராம் குஷ்ரக போதைப்பொருள், 12 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 996 போதை மாத்திரைகள், 30 கிராம் 100 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 130 கிராம் மாவா என்பன கைப்பற்றப்பட்டன.

இந்தப் போதைப்பொருட்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 840 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். இதில், 11 பேர் ஏற்கனவே தடுப்பு காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டோர். 6 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# இசை நிகழ்ச்சி இரத்தானமைக்கு மன்னிப்பு கோரினார் நீ - யோ!

கொழும்பு, டிசெ. 29

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தனது இசை நிகழ்ச்சி திடீரென இரத்து செய்யப்பட்டமைக்கு அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல இசை நட்சத்திரமான நீ-யோ ரசிகர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

நீ-யோ சமூக ஊடகங்களில் வெளியிட்ட பதிவில்,

"இலங்கை ரசிகர்களுடன் இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஆவலாக இருந்தது. எதிர்பாராத சூழ்நிலைகளினால் இசை நிகழ்ச்சி நடத்த முடியாமல் போனது. இதற்காக தாழ்மையுடன் மன்னிப்பு தெரிவிக்கிறேன். விரைவில் மீண்டும் இலங்கை வருவேன்", என்று குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற இருந்த இந்த இசைக் கச்சேரி இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டது. இதைத தொடர்ந்து, பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு கிளம்பியது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டுகளை பொதுமக்கள் முன்வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குறைந்த ஊட்டச்சத்து உணவையே மாணவர்கள் உட்கொள்கின்றனர்!

**ஆய்வில் தகவல்**

கொழும்பு, டிசெ. 29

அரச பாடசாலை மாணவர்கள் குறைந்த விலையில் ஊட்டச்சத்து குறைந்த சிற்றுண்டிகளை அதிகமாக உட்கொள்கின்றனர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய ஆய்விலேயே இந்த விடயம் தெரிய வந்தது.

ஆய்வின்படி, கொழும்பு, கம்பஹா, கண்டி ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச, தனியார் பாடசாலைகளை சேர்ந்த 463 மாணவர்களிடையே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

அரச பாடசாலை மாணவர்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்யக் கூடிய போசணைக் குறைந்த உணவை உட்கொள்ள அதிக வாய்ப்புள்ளது. அத்துடன், இளம் பருவத்தினரின் உணவுகள், அரிசி மற்றும் மா சார்ந்த உணவுகளை அடிப்படையாகக் கொண்டது.

இதேநேரம் காய்கறிகள், கீரைகள் மற்றும் தானியங்களின் தினசரி நுகர்வு குறைவாக உள்ளது. இளம் பருவத்தினரின் துரித உணவு, சிற்றுண்டி மற்றும் சீனி பானங்களின் நுகர்வு அதிகரிப்பைக் காட்டுகிறது.

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை விட உடல் ரீதியாகக் குறைவான செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மேலதிக வகுப்புக்கள் மற்றும் பரபரப்பான கால அட்டவணைகள் இதற்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உணவு பழக்க வழக்கங்கள் குறித்துக் குறைவாகவே அக்கறை செலுத்துகின்றனர் என்றும் ஆய்வை மேற்கொண்ட ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# 2026ஆம் ஆண்டுக்கான அரசாங்க விடுமுறை தினங்கள் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

2026 ஆம் ஆண்டுக்கான விடுமுறை நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, ஏப்ரல், மே மாதங்களில் அதிகப்படியாக தலா 4 விடுமுறை நாட்கள் இடம்பெற்றுள்ளன.

2026 ஆம் ஆண்டின் தமிழ், சிங்கள புத்தாண்டு ஏப்ரல் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மலரவுள்ளது. அத்துடன், வெசாக் பௌர்ணமி தினம் மே 01ஆம் திகதியும் நத்தார் டிசெம்பர் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெற்றுள்ளன.

விடுமுறை நாட்களின் விவரம் வருமாறு, ஜனவரி - 03 சனிக்கிழமை - துருத்து முழுநோன்மதி தினம், ஜனவரி - 15 வியாழக்கிழமை - தைப்பொங்கல் பண்டிகை, பெப்ரவரி - 01 ஞாயிற்றுக்கிழமை - நவம் முழு நோன்மதி தினம், பெப்ரவரி - 04 புதன்கிழமை - சுதந்திர தினம், பெப்ரவரி - 15 ஞாயிற்றுக்கிழமை - மகா சிவராத்திரி விரதம்

மார்ச் - 02 திங்கட்கிழமை - மெதின் முழுநோன்மதி தினம், மார்ச் - 21 சனிக்கிழமை - ரமழான் பண்டிகை, ஏப்ரல் - 01 புதன்கிழமை - பஃக் முழுநோன்மதி தினம், ஏப்ரல் - 03 வெள்ளிக்கிழமை - பெரிய வெள்ளி தினம், ஏப்ரல் - 13 திங்கட்கிழமை - சிங்கள, தமிழ் புத்தாண்டு தினத்துக்கு முந்திய தினம், ஏப்ரல் - 14 செவ்வாய்க்கிழமை - சிங்கள, தமிழ் புத்தாண்டு

மே - 01 வெள்ளிக்கிழமை - வெசாக் முழு நோன்மதி தினம், மே - 01 வெள்ளிக்கிழமை - உலக தொழிலாளர் தினம், மே - 02 சனிக்கிழமை - வெசாக் முழு நோன்மதி தினத்துக்கு அடுத்த தினம், மே 28 வியாழக்கிழமை - ஹஜ் பெருநாள், மே 30 சனிக்கிழமை - அதி பொசன் முழு நோன்மதி தினம், ஜூன் - 29 திங்கட்கிழமை - பொசொன் முழுநோன்மதி தினம்

ஜூலை - 29 புதன்கிழமை - எசல முழுநோன்மதி தினம், ஓகஸ்ட் - 26 புதன்கிழமை - மீலாதுன் நபி (நபிகள் நாயகத்தின் பிறந்த தினம்), ஓகஸ்ட் 27 வியாழக்கிழமை - நிக்கினி முழுநோன்மதி தினம், செப்ரெம்பர் 26 சனிக்கிழமை - பினர முழுநோன்மதி தினம், ஒக்ரோபர் 25 ஞாயிற்றுக்கிழமை - வஃப் முழுநோன்மதி தினம், நவம்பர் 08 ஞாயிற்றுக்கிழமை - தீபாவளி பண்டிகை, நவம்பர் 24 செவ்வாய்க்கிழமை - இல்புர முழுநோன்மதி தினம், டிசெம்பர் 23 புதன்கிழமை - உந்துவப் முழுநோன்மதி தினம், டிசெம்பர் 25 வெள்ளிக்கிழமை - நத்தார் பண்டிகை.

(ஐ)

# இந்தியர்கள் அதிகம் விரும்பும் சுற்றுலா தலமாக இலங்கை!

கொழும்பு, டிசெ. 29

இந்தியர்கள் பண்டிகைக் காலங்களில் அதிகம் விரும்பும் சர்வதேச சுற்றுலா தலங்கள் குறித்த ஆய்வறிக்கையை மேக் மை ட்ரிப் இணையத்தளம் வெளியிட்டுள்ளது. இதில் இலங்கை ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளது.

இந்த ஆய்வின்படி, இந்தியர்கள் அதிகம் முன்பதிவு செய்த நாடுகள் வரிசையில் இலங்கை மூன்றாமிடத்தில் உள்ளது.

அத்துடன், குறித்த வரிசையில் தாய்லாந்து முதலிடத்தில் உள்ளது. , ஐக்கிய அரபு இராச்சியம் இரண்டாமிடத்தில் உள்ளது. இலங்கையைத் தொடர்ந்து வியட்நாம் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த காலங்களை விட வியட்நாம் நோக்கிய பயண ஆர்வம் இந்தியர்களிடையே வெகுவாக அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

இலங்கை மற்றும் தாய்லாந்து தவிர, மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளும் இந்தியர்களின் விருப்பமான இடங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சுற்றுலாத் தலங்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# 233 பாடசாலைகள் பேரிடரால் பாதிப்பு

கொழும்பு, டிசெ. 29

ஊவா மாகாணத்தில் உள்ள 233 பாடசாலைகள் பல்வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளன என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று அவர் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறினார்.

ஊவா மாகாணத்தில் உள்ள 233 பாடசாலைகள் பல்வேறு அனர்த்த நிலைகளால் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 181 பாடசாலைகளில் சுமார் 75 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அனர்த்த நிலைமையைத் தொடர்ந்து மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டதோடு, அவர்களுக்கு பாதுகாப்பான கற்றல் சூழலை வழங்கும் நோக்கில், ஆளுநர், அரசியல் பிரமுகர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் இணைந்து "நென திரி" செயல்திட்டத்தை ஆரம்பித்தோம்.

பதுளை மாவட்டத்தில் உள்ள 233 நிலையங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பாடசாலைகளின் திருத்தப் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. சில நாட்களில் 8,000 பேர் வரை தன்னார்வலர்களாகப் பணியாற்றியுள்ளனர். வழங்கப்பட்ட உழைப்பின் மொத்த மதிப்பு சுமார் 8.13 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் தன்னார்வலர்கள் ஊடாக இலவசமாகப் பெறப்பட்டன என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.